புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • அக்டோபர் 31, 2024 • புரட்சி 24 • முழக்கம் 43 • விலை ரூ.3.00

## எடப்பாடி, திருச்சியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற கூட்டங்களின் எழுச்சி; கொடைக்கானலில் ஆளுநருக்கு கருப்புக் கொடி!

# கழகத் தோழர்களின் தீவிரக் களப்பணி

*எடப்பாடியில் கழகம் நடத்திய பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் திருச்சியில் நடைபெற்ற விடுதலை இராசேந்திரனின் ‘ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்’, ‘சங் பரிவார் சதி வரலாறு’, ஓவியா எழுதிய ‘ஏற்றப்படும் அடிமை விலங்குகள்’ மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழாவும் எழுச்சியுடன் நடைபெற்றன.*

***எடப்பாடி:*** *தந்தை பெரியாரின் 146 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் சேலம் மாவட்டக் கழக சார்பில் 23.10.2024 அன்று எடப்பாடி பேருந்து நிலையத்தில் மக்களின் பேராதரவுடன் எழுச்சியோடு நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு சேலம் மாவட்ட இளைஞரணிச் செயலாளர் பிரபாகரன் தலைமை வகித்தார். தலைமைக் குழு உறுப்பினர்கள் காவை ஈசுவரன், அ.சக்திவேல், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு, கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தங்கதுரை, எடப்பாடி குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.*

*சிறப்பு அழைப்பாளராக எடப்பாடி நகர மன்றத் தலைவரும், தி.மு.கழக எடப்பாடி நகரச் செயலாளருமான பாட்ஷா பங்கேற்றார். மேட்டூர் டி.கே.ஆர்.இசைக் குழுவின் பறை இசை மற்றும் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. மூடநம்பிக்கைகளுக்கு எதிரான பெரியாரியலாளர் சிற்பி இராசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்வு பொதுமக்கள், மத்தியில் கவனத்தை ஈர்த்தது.*






*மேலும், சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழகப் பேச்சாளர், சேலம் மாவட்ட இலக்கிய அணித் தலைவர் கவிஞர் கோனூர் வைரமணி ஆகியோர் தொடக்கவுரையாற்றினார்கள். நிறைவாகக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். மேலும் எடப்பாடி குமார் - சுவாதி பிரியா ஆகியோரின் இரண்டாவது பெண் குழந்தைக்கு நிறை மொழி என்ற பெயரைச் சூட்டினார்.*

*நங்கவள்ளி அ.செ.சந்திரசேகரன் நன்றி கூறினார். தேவூர் சங்கர் (தமிழன் ஆட்டோ ஒர்க்ஸ்) இரவு அசைவு உணவு ஏற்பாடு செய்தார்.*

### நூல் வெளியீட்டு விழா



***திருச்சி:*** *கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதி தமிழ்நாடு அரசால் நாட்டுமையாக்கப்பட்ட ‘ஆர்.எஸ். எஸ். ஓர் அபாயம் ‘ - சங் பரிவாரின் சதி வரலாறு மற்றும் ஓவியாவின் ஏற்றப்படும் அடிமை விலங்குகள் உள்ளிட்ட நூல்களை நன்செய் பதிப்பகத்தின் சார்பில் மக்கள் பதிப்பாக வெளியிடும் விழா 27.10 .2024 அன்று திருச்சி ரவி மினி ஹாலில் நடைபெற்றது.*

*விழாவிற்கு மாவட்டக் கழகப் பொருளாளர் டார்வின் தாசன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் மீ. இ. ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். குணராஜ் வரவேற்புரையாற்றினார். இம்மூன்று நூல்களையும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் முனைவர் தி.நெடுஞ்செழியன், ஓய்வுபெற்ற வனத்துறை அலுவலர் கோவிந்தசாமி, கழகத் தோழர்கள் சோலை மாரியப்பன், மதுரை வாசுகி, ம.பி. அனுராதா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். நன்செய் பதிப்பகம் கவிஞர் தம்பி தொடக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் மு.மனோகரன் நன்றி கூறினார்.*

*விழாவில் ரூ.20,000/- க்கு நூல்கள் விற்பனை செய்யப்பட்டது. அந்த தொகையினை கழக வளர்ச்சி நிதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் ‘நாளை விடியும்’ இதழாசிரியர் அரசெழிலன் வழங்கினார். இவ்விழாவில் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.*

### ஆளுநருக்கு கருப்புக் கொடி

***திண்டுக்கல்:*** *தமிழ்நாட்டின் - தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைத் தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநர் R.N.ரவியைக் கண்டித்து திண்டுக்கல் மாவட்டக் கழக சார்பில் கருப்புக்கொடி காட்டும் போராட்டம் 23.10.2024 அன்று கொடைக்கானலில் நடைபெற்றது.*

*இதில் ஆளுநருக்கு கருப்புக் கொடி காட்டி 60க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் கைதாகினர். தனியார் மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்ட கழகத் தோழர்கள் மாலை விடுவிக்கப்பட்டனர்.*

*ஆர்ப்பாட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத் தலைவர் மருதமூர்த்தி, சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, திருப்பூர் மாவட்டத் தலைவர் தோழர் முகில் இராசு, மதுரை மாவட்டச் செயலாளர் மணி அமுதன், தேனி மாவட்ட அமைப்பாளர் தேனி ராயன் ஆகியோர் பங்கேற்று கண்டனவுரையாற்றினார்கள்.*

## வழிகாட்டுகிறார் அரசெழிலன்!



பி.இர.அரசெழிலன் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளாத உறுதியான ஓர் பெரியாரியலாளர். வணிக நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்திக்கொண்டு பெரியார் கொள்கையைப் பரப்புவதில் தொடர்ந்து 30 ஆண்டுகளாக களமாடிவருகிறார். ‘நாளை விடியும்’ என்ற இதழை நடத்திவருகிறார். பெரியார் இயக்க இதழ்களில் வரும் கட்டுரைகளை தேர்வு செய்து சிறு சிறு நூல்களாக வெளியிடுவது அவரது தொடர் பணி. வார விடுமுறை நாளில் தமிழ்நாட்டில் எங்கு பெரியார் இயக்க நிகழ்ச்சிகள் நடந்தாலும் அவரைப் பார்க்க முடியும். திராவிடர் விடுதலைக் கழகத்தின் பரப்புரைப் பயணங்களுக்கு சொந்த செலவில் பெரியாரிய நூல்களை அச்சிட்டு வழங்கி வருகிறார். அனைத்து பெரியார் இயக்கங்களுடனும் நட்பு பாராட்டுபவர்.

அவரது 60வது பிறந்தநாளையும், கொள்கை பரப்பும் நாளாகவே கொண்டாடியுள்ளார். விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘ஆர்.எஸ்.எஸ். ஓர் அபாயம்’ – ‘சங் பரிவாரின் சதி வரலாறு’ நூல்களையும், தோழர் ஓவியா எழுதிய ‘ஏற்றப்படும் அடிமை விலங்குகள்’ நூலையும் நன்செய் பதிப்பகம் மலிவுப் பதிப்பாக வெளியிட்டுள்ளது. நூலின் தயாரிப்புக்கான நிதிப் பங்களிப்பை வழங்கிய தோழர் அரசெழிலன் அதன் வெளியீட்டு விழாவுக்குமான செலவையும் ஏற்று அதையே தனது பிறந்தநாளைக் கொண்டாட்டமாக்கியுள்ளார்.

திருச்சியில் அக்டோபர் 27 அன்று திராவிடர் விடுதலைக் கழக சார்பில் இந்த நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியிலேயே ரூ.20,000/– மதிப்புக்கு நூல்கள் விற்பனை ஆகின. இந்தத் தொகையையும் கழகத்துக்கு நன்கொடையாக கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கிவிட்டார்.

நிகழ்வில் பி.இர.அரசெழிலன் – ம.பி.அனுராதா இணையருக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மேடையில் நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

பெரியார் கொள்கையின் வலிமையும், உண்மையும் தான் இத்தகைய செயற்பாட்டாளர்களைக் காலம்தோறும் உருவாக்கி வருகிறது. பெரியாரியலுக்கு எவ்வகையில் தொண்டாற்றலாம் என்பதற்குச் சான்றாக நிற்கிறார் தோழர் அரசெழிலன்!. அவரது தொண்டறம் தொடர வாழ்த்துவோம்.

தலையங்கம்

## திராவிடக் கருத்தியல்

கல்வித்துறையைக் காவி மயமாக்குவது – கல்வியின் நோக்கத்தையே சிதைக்கும் மாபெரும் ஆபத்து; வர்ணாசிரமக் கட்டமைப்பைக் குலைக்கக்கூடிய மாபெரும் சக்தியே கல்வி தான். வரலாறு அதை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ஒன்றிய பாஜக ஆட்சி, கல்வியை காவிமயமாக்கும் தீவிர முயற்சிகளில் தொடர்ந்து செயல்பட்டுவருகிறது. ஆசிரியர்களில் பலரும் காவி சிந்தனையில் மூழ்கிக் கிடக்கிறார்கள், அதுவும் தமிழ்நாட்டில் இந்தநிலை என்பது மிகவும் கவலைக்கும், கண்டனத்திற்குரியதாகும்.

இரண்டு உதாரணங்களை சுட்டிக்காட்டலாம். அண்மையில் சென்னை அசோக் நகர் மற்றும் சைதாப்பேட்டை மாதிரி அரசுப் பள்ளிகளில் மகா விஷ்ணு என்ற சனாதனவாதி, உடல் ஊனம் என்பது முன் ஜென்மப் பாவம் என்று மாணவர்களிடத்தில் பேசியது கடும் விவாதத்துக்குள்ளானது. திருச்சி – அரியலூர் – பெரம்பலூர் மாவட்டக் கல்வி அதிகாரிகள், மாணவர்களை விநாயகர் சதுர்த்தி உறுதிமொழி ஏற்கக் கட்டாயப்படுத்தினார்கள். ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சந்துரு தலைமையிலானக் குழு பள்ளி மாணவர்களிடையே ஜாதி, மத, நச்சுக் கருத்துக்களைத் திட்டமிட்டு பரப்புவதைத் தடுக்க அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தமிழ்நாடு முதல்வரிடம் அறிக்கையாக வழங்கியிருக்கிறது. இது தமிழ்நாடு அரசே நியமித்த குழுவாகும். அரசு இந்த அறிக்கையை செயல்படுத்த முன்வர வேண்டும் என்பது நமது உறுதியான கருத்து.

ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் ஆசிரியர்கள், குறிப்பாகத் தமிழ் ஆசிரியர்கள், திராவிடக் கருத்தியலின் தூதுவர்களாக இருந்தார்கள். மாணவர்களிடையே பார்ப்பனிய எதிர்ப்பையும், சமூகநீதியையும் விதைத்தார்கள். இன்று நிலைமை தலைகீழாகிவிட்டது. அண்மையில் ‘திராவிடர் கருத்தியல் ஆசிரியர் சங்கம்’ என்ற அமைப்பை சென்னையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்துள்ளார். இது காலத்துக்குத் தேவையான அவசியமான முயற்சியாகவே நாம் கருதுகிறோம். கல்லூரி – பல்கலைக்கழகங்களில் பார்ப்பனிய – சனாதனக் கருத்தாளர்கள் அதிகரித்துவருவதையும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளார்.

அமைச்சர் பொன்முடியின் ‘‘திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்’’ நூல் வெளியீட்டு நிகழ்வில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், திராவிடம் குறித்த தனது தெளிவான பார்வையை முன் வைத்ததைக் குறிப்பிட வேண்டும். மொழி, நிலம், பண்பாடு இம்மூன்றையும் உள்ளடக்கியதே திராவிடம் என்று மிகச்சரியாக சுட்டிக்காட்டியுள்ளார். திராவிடம் ஆரியத்தை எதிர்ப்பது மட்டுமல்ல; பதம் பார்க்கும் கருத்து என்றும் எச்சரித்துள்ளார்.

திராவிடம் என்பதே வட மொழிச் சொல் தான் என்று திராவிடக் கருத்தியலை எதிர்ப்போரும் உண்டு. மொழி அறிஞர் தேவநேயப் பாவாணார், திராவிடம் என்பது வட மொழிச் சொல் அல்ல என்று சொல் ஆய்வு வழியாக உறுதி செய்துள்ளார். அப்படியே அது வட மொழி என்றாலும், பார்ப்பனர்களை விலக்கி வைக்கக் கூடிய மாற்றுச் சொல்லைப் பரிந்துரைத்தால், அதைத் தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறேன் என்றார் பெரியார்.

திராவிடம் என்ற கருத்தியலை அரசியலில் மட்டுமின்றி பண்பாட்டுத்தளத்திலும் முன்னெடுக்கப்படாவிட்டால் ‘ஆரியம் சூழ்ச்சியாக வெவ்வேறு வடிவங்களில் தன்னை நிலைநிறுத்தி விடும் ஆபத்தை பெரியார் எச்சரித்தார். அரசியலில் மட்டும் பார்ப்பன எதிர்ப்பையும், பண்பாட்டில் பார்ப்பனிய ஆதரவையும் பின்பற்றியது நீதிக்கட்சி. அதன் காரணமாகவே ‘திராவிடர் கழகத்தை’ உருவாக்கினார் பெரியார்.

பார்ப்பன – பார்ப்பனரல்லாதார் போராட்டம் அரசியல் உரிமைகளுக்கானது என்றால் ‘பிராமணர்’ – ’சூத்திர’ போராட்டம் பண்பாட்டு அடிமைத்தனங்களுக்கு எதிரான சுயமரியாதைக்கானது என்றார். பண்பாட்டு விடுதலையை தவிர்த்துவிட்டு பெறக்கூடிய அரசியல் உரிமைகள் முழுமையாகாது என்றார்.

இந்து மதம் கட்டமைத்த பண்பாட்டுப் பண்டிகைகள் அனைத்தும் திராவிடர்களை ஆரியர்கள் சூழ்ச்சியால் வீழ்த்தியதை உள்ளடக்கியதே என்று சான்றுகளுடன் எடுத்துக்காட்டினார் பெரியார். திராவிட அசுரனை தேவர் என்ற ஆரியக் கூட்டம், வஞ்சகமாக கொலை செய்ததைக் கொண்டாட முடியுமா? என்று கேட்டார்.

அதன் காரணமாகவே திராவிட இயக்கம் தீபாவளிக்கு வாழ்த்துக் கூறுவதில்லை. இந்த திராவிட இயக்க மரபை அண்ணா, கலைஞர் கட்டிக்காத்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலினும் இதில் உறுதியாக நிற்கிறார். இதுவே கொள்கைக்கான அடையாளம். அண்மையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், ‘‘நம்பிக்கையுள்ளவர்களுக்கும் – கொண்டாடுபவர் களுக்கும் தீபாவளி வாழ்த்துகள்’’ என்று பேசியிருப்பது வியப்பாக இருக்கிறது. இது ஏற்கத்தக்கக் கருத்து அல்ல.

சனாதனம் என்ற கொடிய நோய் ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசியவர் உதயநிதி ஸ்டாலின். அதனால் இந்தியா முழுமைக்கும் கடும் எதிர்ப்புகளைச் சந்தித்து வருகிறார். என்றாலும் தனது கருத்தில் உறுதியாக நிற்பதைப் பாராட்ட வேண்டும். அவரே ‘‘நாங்கள் சனாதனத்தை எதிர்க்கிறோம், சனாதனத்தை நம்பிக்கையோடு கொண்டாடுபவர்களுக்கு எங்களது வாழ்த்துகள்’’ என்று அவர் ‘தீபாவளி வாழ்த்து’ போலக் கூறினால் ஏற்க முடியுமா? இந்த கேள்வி இயல்பாகவே எழுகிறது. திராவிடக் கருத்தியலை முன்னெடுக்கும் போராட்டத்தில் கருத்துச் சிதைவுகளை உருவாக்கிவிடக்கூடாது. இப்போது தீபாவளி கொண்டாடுவோருக்கு வாழ்த்து, அடுத்து ‘தீபாவளி’ வாழ்த்து வரும் என்று பாஜகவினர் வரவேற்று வாழ்த்துப்பா பாடுவதையும் கவனிக்க வேண்டும்.

# கண்டம் விட்டு கண்டம் பாயும் ‘பூணூல்’ சக்தி

பூணூல் என்பது நூல் அல்ல, இஸ்ரேல் விடும் ஏவுகணையை விட கண்டம் விட்டு கண்டம் பாயும் சக்தி பூணூலுக்கு உண்டு. காயத்திரி மந்திரம் ஓதி. பூணூல் முதுகில் ஏறிவிட்டால் அவ்வளவு தான், ஏதோ கிண்டல் அடிக்கிறோம் என்று கருதக்கூடாது. ‘தினமலர்’ நாளேடு (அக் 27) அந்த சக்தி தானாக வரும் என்று சிலாகிக்கிறது.

1200 ஆண்டுகளுக்கு முன்பு கேரளாவில் காலடி என்னும் ஊரில் நம்பூதிரி பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்தவர் ஆதிசங்கரர். அவர்தான் நான்கு சங்கர மடங்களை, நான்கு வேதங்களின் அடிப்படையில் உருவாக்கியவர்.

அதில் காஞ்சி சங்கர மடம் கிடையாது என்பது தான் முக்கியம். அது டுபாக்கூர் மடம். இதை சிருங்கேரி, பத்ரிநாத், பூரி, துவாரகை சங்கராச்சாரிகளே கூறுகிறார்கள். “இல்லை இல்லை! நாங்களும் ஒரிஜினல் தான், இதுவும் சங்கர மடம் தான்” என்று தலைகீழாக நின்று தண்ணீர் குடிக்கிறது காஞ்சி மடம். அதற்கு சாஸ்திரங்கள் அங்கீகாரம் தேவையில்லை. குடியரசுத் தலைவர், பிரதமர், நீதிபதிகள் என ஆட்சி அதிகாரம் அங்கீகரிக்கிறது. அதுவே போதும் ஆதி சங்கரர் நேரில் வந்து எதிர்த்தாலும் நாங்கள் ஏற்க மாட்டோம். என்கிறது காஞ்சி சங்கர மடம்.

சரி, கதைக்கு வருவோம். சங்கர மடங்களை உருவாக்கிய ஆதி சங்கரருக்கு அய்ந்து வயதில் உபநயனம் செய்தார்களாம். உடனே அபார சக்தி வந்துவிட்டதாம்.

- ஆதி சங்கரர், பிச்சை கேட்ட போது வறுமையில் வாடிய ஒரு பெண் வீட்டில் எதுவும் இல்லாததால் ஒரு நெல்லிக்கனியை மட்டும் பிச்சைப் போட்டாராம். நெகிழ்ந்து போன ஆதி சங்கரர் உடனே தனது பூணூல் சக்தியால் அந்தப் பெண்ணின் வீட்டில் தங்க நெல்லிக்கனிகளை மழையாகக் கொட்ட வைத்தாராம்.

- ஆதி சங்கரரின் தாயார் ஆர்யாம்பாள், பூர்ணா நதியில் ஒவ்வொரு நாளும் நீராடுவாராம். நதி வரை செல்வதற்கு அவர் உடல் ஒத்துழைக்கவில்லை. உடனே ஆதி சங்கரர் கங்கா தேவியைப் பிரார்த்திக்கிறார். அடுத்த நிமிடமே பூர்ணா நதி தனது நதி நீர் ஓட்டத்தை திருப்பிக்கொண்டு ஆதி சங்கரரின் இல்லத்திற்குப் பின்னால் ஓடத்தொடங்கிவிட்டது. இது உபநயனம் என்ற பூணூல் உருவாக்கிய சக்தியாம்.

- துங்கை நதிக் கரையில் ஆதி சங்கரர் வலம் வந்த போது ஒரு காட்சியைக் கண்டாராம். கடும் வெயிலில் பிரசவ வலியால் ஒரு தவளை கத்திக் கொண்டு இருந்தது. அப்போது ஒரு பாம்பு தனது ‘படத்தை’ விரித்து தவளைக்கு நிழல் தந்ததாம். என்னடா, இது? தவளையை விழுங்கும் பாம்பு பாதுகாப்பு தருகிறதே என்று வியந்தாராம். உடனே மடத்தை நிறுவுவதற்கு இதுவே சரியான இடம் என்று முடிவு செய்துவிட்டாராம். அடுத்த நிமிடம் சரஸ்வதி தேவியை தியானம் செய்து ‘தேவியே என் கண் முன் வா’ என்றாராம். அப்படியே சரஸ்வதி தோன்றினாள். நான் தொடங்க இருக்கும் சாரதா பீடத்திற்கு நீ நிரந்தரமாக குடியேற வேண்டும். வேறு எங்கும் வீடு பார்க்க கூடாது என்று ஆதி சங்கரர் கேட்டவுடன் தேவி ஓகே சொல்லி விட்டாரம். ஆதி சங்கரரின் உபநயனத்துக்கு இவ்வளவு சக்திகள் உண்டு என்று பூரிக்கிறது தினமலர். செயற்கை நுண்ணறிவு காலத்திலும் இப்படி வெட்கப்படாமல் படம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

- ஒரு உண்மையை மட்டும் அந்த ஏடு ஒப்புக் கொண்டுள்ளது. ஆதி சங்கரர் நியமித்த நான்கு மடங்களை பட்டியலிட்டுள்ளது. அதில் காஞ்சி சங்கர மடம் இடம்பெறவில்லை; இனியும் காஞ்சி மடத்தை சங்கர மடம் என்று எழுதுவார்களா?

- மற்றொரு செய்தியையும் குறிப்பிட வேண்டும். சனாதன தர்மம் வர்ணாசிரம தர்மம் அல்ல என்று வாய்ச் சவடால் அடிக்கும் ஆளுநர் கம்பெனிகளுக்கு காஞ்சிபுரத்தில் சிருங்கேரி இளைய சங்கராச்சாரி பதிலடி தந்துவிட்டார்.

- சனாதன தர்மம் என்று சொல்லக்கூடாது “சனாதன வைதீக தர்மம்” என்று தான் கூற வேண்டும். 1200 ஆண்டுகளுக்கு முன் ஆதி சங்கரர் உருவாக்கியது சனாதன தர்மம் அல்ல, சனாதன வைதீக தர்மம் என்று பேசியிருக்கிறார். தினமலர் இதற்கு பிறகாவது காஞ்சி மடம் சங்கர மடம் அல்ல – சனாதன தர்மம் வைதீக தர்மம் தான் என்று ஒப்புக்கொள்ளுமா? என்று நாம் கேட்க மாட்டோம். அவாளுக்கு அறிவு நாணயமே கிடையாது. பார்ப்பனியத்துக்காக எதையும் செய்வார்கள். ஆமாம்! எங்கள் வேத சக்தி கல்லைக் கடவுளாக மாற்றும். எங்கள் பூணூல் மனிதனை பிரம்மா தலையில் பிரசவம் பார்க்கும். கடவுள்களுக்கே சம்மன் போட்டு ஆஜாராக வைக்கும். கண்டம் விட்டு கண்டம் பாயும் எச்சரிக்கை.

- கோடங்குடி மாரிமுத்து


## புரட்சிப் பெரியார் முழக்கம்

ஆண்டு கட்டணம்

ரூ.300/-

அய்ந்தாண்டு கட்டணம்

ரூ.1500/-

தொடர்புக்கு : ஆசிரியர், 15, தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை - 96, பேச : 89733 41377

# பெரியார் - அடிகளாரின் ‘நெகிழ்வான’ முதல் சந்திப்பு! (2)

## விடுதலை இராசேந்திரன்

**சென்னை கழகத் தலைமை அலுவலகத்தில் 29.10.2024 அன்று நிமிர்வோம் வாசகர் வட்ட சார்பில் குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு சிறப்புக் கூட்டம் நடந்தது. அடிகளார் படத்தைக் கழகப் பொதுச்செயலாளர் திறந்து வைத்து ஆற்றிய உரை. கடந்த இதழின் தொடர்ச்சி..**

பெரியார் பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டத்தை அறிவிக்கிறார். ஏனெனில் வருணாசிரம கொள்கை நாட்டில் மேலோங்கிவிட்டது, வருணாசிரம கொள்கையை எதிர்ப்பதற்காக பிள்ளையார் சிலை உடைப்பை நடத்துகிறேன் என்று பெரியார் அறிவிப்பு வெளியிட்டார். பிள்ளையார் சிலைக்கும் வருணாசிரம தர்மத்திற்கும் என்ன தொடர்பு என்றால், எல்லா அரச மரத்தடியிலும் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டுள்ளது. புத்தருக்கு அரச மரத்தடியில் அறிவு ஒளி (ஞானம்) கிடைத்தது என சொல்கிறார்கள். அந்த அரச மரத்தடியில் பல இடங்களில் புத்தருக்கு சிலைகள் வைக்கப்பட்டன. அந்த சிலைகளைத்தான் பல இடங்களில் சிதைத்து, உடைத்து உருமாற்றம் செய்து அது விநாயகர் சிலையாக மாற்றப்பட்டதாக தகவல்கள் உண்டு. இடைக்காலத்தில் பல்லவ மன்னனின் படைத்தளபதி பரஞ்சோதி வாதாபிக்கு படையெடுத்துச் சென்ற போது அங்குள்ள விநாயகர் சிலையைப் பார்த்து வியந்து தமிழ்நாட்டுக்கு கொண்டுவந்தான் என்பது வரலாறு.

புத்தர் குறித்து நடந்த விழாவில் பெரியார் உள்பட அனைவரும் பேசுகிறார்கள். சென்னை வானொலி அந்த உரைகளை பதிவு செய்து ஒலிபரப்புகிறது. ஆனால், பெரியாரின் உரையை மட்டும் ஒலிபரப்ப மறுக்கிறது. உடனே பெரியார் எல்லோரின் உரைகளையும் வெளியிடும்போது புத்தர் விழாவில் எனது உரையை ஏன் வெளியிட மறுக்கிறீர்கள் என்று கேள்வி எழுப்புகிறார். அத்துடன், “புத்தர் விழாவில் எனது கருத்தை இருட்டடிப்புச் செய்ததால், புத்தரை ஒழிப்பதற்கு மாற்றாக வந்த வருணாசிரம தர்ம குறியீடான விநாயகரின் சிலையை உடைப்பது” என்று தீர்மானித்து அந்த போராட்டத்தை நடத்துகிறார். கோயில்களில் உள்ள விநாயகர் சிலைகளை எடுத்து உடைக்க வேண்டும் என பெரியார் சொல்லவில்லை. காசு கொடுத்து வாங்கி விநாயகர் பொம்மையை சாலையில் போட்டு உடையுங்கள், காவல் துறை எதிர்ப்பு தெரிவித்தால் வீட்டுக்குள்ளேயே போட்டு உடையுங்கள் என்று அறிவுறுத்துகிறார்

இராஜாஜி முதல்வராக இருந்த காலம். அவர் யாரையும் கைது செய்யவில்லை. அப்போது திமுக பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம், பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டை எடுத்தது. பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டத்தின் போது குன்றக்குடி அடிகளாருக்கு கோபம் வந்துவிட்டது. தமிழகத்தில் உள்ள மடாதிபதிகள் உள்ளிட்டோரை அவர் தனது மடத்திற்கு அழைத்து கலந்துபேசி, இதனை விடக்கூடாது, எதிர்த்து பெரிய போராட்டம் நடத்த வேண்டும் என்று கூறுகிறார். அப்போது, பெரியாருக்கு எதிராக, அவருடைய போராட்டங்களுக்கு எதிராக நெருக்கடியை உருவாக்க வேண்டும் என்பதற்காக குன்றக்குடி அடிகளார் தலைமையில் தமிழ்நாடு அருள்நெறிக் கழகம் என்ற அமைப்பை உருவாக்குகிறார்கள். திராவிடர் கழகம் நடத்தும் கூட்டங்களில் எல்லாம் அருள்நெறிக் கழகத்தினர் சென்று கலகம் செய்கிறார்கள். அருள் நெறிக் கழகத்தினர் நடத்தும் கூட்டங்களில் திராவிடர் கழகத்தினர் கலகம் செய்கிறார்கள். இரு தரப்பினரும் கூட்டம் நடத்த முடியாத அளவு பல இடங்களில் அடி தடி நடந்து ரத்தம் சிந்தப்படுகிறது.

1955ஆம் ஆண்டு பெரியார் மலேசியாவுக்கு செல்கிறார். அவர் அங்கு சென்று சுயமரியாதை இயக்கக் கருத்துகளைப் பிரச்சாரம் செய்தார். பெரியார் மலேசியாவுக்கு சென்று



பிரச்சாரம் செய்கிறாரா? நான் விடமாட்டேன் என்று சொல்லி குன்றக்குடி அடிகளாரும் மலேசியாவுக்குச் சென்று பிரச்சாரம் செய்தார். இன்னும் சொல்லப்போனால் இந்துத் துறவிகள் கடல் தாண்டி போகக் கூடாது என்பது இந்து மதத்தின் விதி. கடல் தாண்டி சென்றாலும் கூட நான் பெரியாரை விட மாட்டேன் என்று சொல்லித் தான் மலேசியாவுக்கு சென்றார் குன்றக்குடி அடிகளார். இப்படி இருவருக்கும் இடையில் கடுமையான மோதல் போக்கு நிலவிவந்தது. ஆனால் மலேசியாவில் பேசிய குன்றக்குடி அடிகளார் சைவத்தில் ஜாதி தீண்டாமை கிடையாது என்றும், ஆனால் பெரியார் சைவத்தை குறை கூறி பேசி வருகிறார் என்றும் அடிகளார் பேசிவந்தார். இந்த செய்தி பெரியாரின் காதுக்கு வரும் போது பெரியார் சொன்னார், சைவத்தில் பெரும்பாலும் பிற்போக்காளர்களாகவும், வர்ணாசிரமத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தான் இருப்பார்கள். ஆனால் இந்த சாமியார் சைவத்தில் ஜாதி தீண்டாமை இல்லை என்று சொல்கிறாரே என்று கவனிக்கத் தொடங்கினார்.

பெரியாருக்கு வேண்டியவர்களும், அடிகளாருக்கும் வேண்டியவர்களும் இருவருக்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தனர். அந்தச் சந்திப்பானது 1954இல் ஈரோட்டில் உள்ள சென்னியப்ப முதலியார் என்பவரது இல்லத்தில் நடைபெற்றது. அந்த சந்திப்பின் போது அடிகளார் வீட்டின் மாடியில் அமர்ந்து கொண்டிருந்தார். பெரியார் உள்ளே செல்கிறார். பெரியார் வந்துவிட்டார் என்றால் நான் கீழே இறங்கி வருகிறேன் என்றார் அடிகளார். ஆனால் பெரியார். இல்லவே இல்லை, அவர் சன்னிதானம் என்கிற உயரியப் பொறுப்பில் உள்ளார். அவருக்கு உரிய மரியாதையை நாம் கொடுத்தாக வேண்டும். எனவே அடிகளார் கீழே இறங்கி வர வேண்டாம், நான் மேலே வருகிறேன் என்று சொல்லிவிட்டு பெரியார் மாடிக்குச் சென்றார்.

> **பெரியார் என்றைக்குமே பொது ஒழுக்கம் என்ற சொல்லைத் தான் பயன்படுத்துவார். ஒழுக்கம் என்ற சொல்லை அவர் பயன்படுத்தியது கிடையாது. நாட்டில் ஒழுக்கம் என்பது திருடாதே, பொய் சொல்லாதே, மாமிசம் உண்ணாதே, மதுப்பழக்கம் கூடாது என்கிறது. ஆனால் மனிதனை சமமாக நடத்து, தீண்டாமையை கடைபிடிக்காதே, நேரத்தை வீணடிக்காதே, ஏற்றுக்கொண்ட வேலையை உண்மையாகச் செய், மற்றவனை ஏமாற்றாதே என்ற பொது ஒழுக்கத்தைப் பற்றி யாரும் பேசவில்லை. பெரியார் தான் பேசினார். கடவுள் நம்பிக்கையற்ற பெரியார் அவையில் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டால், தள்ளாத வயதிலும் எழுந்து நிற்பார். தேசியகீதம் பாடப்பட்டாலும் எழுந்து நின்று உரிய மரியாதையை செலுத்தியவர் பெரியார்.**

மேலே சென்றவுடனேயே அடிகளார் பெரியாரை அருகே உட்காரச் சொன்னார். ஆனால் பெரியார் மறுத்துவிட்டார். உங்கள் மடாதிபதிக்கு என்று தனி இருக்கை உள்ளது. தமிழர்களுக்கான மடாதிபதியாக நீங்கள் இருப்பதால் நீங்களும் நானும் சமமாக உட்காருவது சரியாக இருக்காது என்று சொல்லிவிட்டு தனியாக நாற்காலி எடுத்துப் போட்டு பெரியார் அமர்ந்தார். கடவுள் மறுப்பு, ஜாதி ஒழிப்பு பேசக்கூடிய ஒருவர் உயரிய பண்போடும், நாகரீகத்தோடும் அணுகுவதைப் பார்த்து அடிகளார் மெய் சிலிர்த்துப்போனார்.

பெரியாருக்கு என்று ஒரு கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கைகளில் எப்போதும் உறுதியாக இருப்பார். அதே நேரம் பொது ஒழுங்கை காப்பாற்ற வேண்டும் என்பதிலும் பெரியாருக்கு உறுதியான நிலைப்பாடு உண்டு. பெரியார் என்றைக்குமே பொது ஒழுக்கம் என்ற சொல்லைத் தான் பயன்படுத்துவார். ஒழுக்கம் என்ற சொல்லை அவர் பயன்படுத்தியது கிடையாது. நாட்டில் ஒழுக்கம் என்பது திருடாதே, பொய் சொல்லாதே, மாமிசம் உண்ணாதே, மதுப்பழக்கம் கூடாது என்கிறது. ஆனால் மனிதனை சமமாக நடத்து, தீண்டாமையை கடைபிடிக்காதே, நேரத்தை வீணடிக்காதே, ஏற்றுக்கொண்ட வேலையை உண்மையாக செய், மற்றவனை ஏமாற்றாதே என்ற பொது ஒழுக்கத்தைப் பற்றி யாரும் பேசவில்லை. பெரியார் தான் பேசினார். கடவுள் நம்பிக்கையற்ற பெரியார் அவையில் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டால், தள்ளாத வயதிலும் எழுந்து நிற்பார். தேசியகீதம் பாடப்பட்டாலும் எழுந்து நின்று உரிய மரியாதையை செலுத்தியவர் பெரியார்.

இருவரும் உரையாடும் போது பெரியார் அடிகளாரிடம் கேட்கிறார். நாட்டில் ஜா திமதக் கொடுமைகள் இருக்கிறது. இதை மதமும், கடவுளும் சகித்துக் கொண்டு இருக்கிறதே நியாயம் தானா என்று கேட்டார். உடனே அடிகளார், இது மனிதர்கள் செய்த தவறு, கடவுள் சொல்லவில்லை என்று பதிலளித்தார்.

**“அப்படியானால் கடவுள் அப்படி சொல்லவில்லை என்பதை நீங்கள் பிரச்சாரம் செய்யுங்கள். கடவுள் அப்படி செய்தார் என்பதலால் தானே கடவுளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்கிறோம். இல்லையென்றால் கடவுளை எதிர்க்க வேண்டிய அவசியம் எனக்கு என்ன வந்தது? எனக்கும் கடவுளுக்கும் தனிப்பட்ட முறையில் என்ன பகை இருக்கிறது? நான் கடவுளைப் பார்த்ததுக் கூட இல்லையே என்றார் பெரியார்.**

அந்த உரையாடலில் நீங்கள் ஜாதித் தீண்டாமை ஒழிப்பில் உடன்படுகிறீர்கள். நானும் உடன்படுகிறேன். எனவே இந்த விசயத்தில் நாம் இருவரும் இணைந்து செயல்படுவோம் என்ற முடிவுக்கு இருவரும் வருகிறார்கள்.

அடிகளார், தொடர்ந்து பெரியார் பிறந்தநாள் விழாக்களில் பங்கெடுத்துப் பேசுகிறார். பெரியாரின் பிறந்த நாளுக்க்காக விடுதலை நாளேடு சிறப்பு மலரை ஆண்டுதோறும் வெளியிடுவது வழக்கம். அதில் குன்றக்குடி அடிகளாரின் கட்டுரை இடம்பெறாத மலரே கிடையாது. பெரியார் காமராசரை ஆதரித்த போது அடிகளாரும் காமராசரை ஆதரித்தார். அண்ணாவை ஆதரித்த போது அவரும் அண்ணாவையும் ஆதரித்தார். இப்படியான ஆரோக்கியமான புரிதல் தான் அவர்களுக்குள் இருந்தது. தன்னுடைய குன்றக்குடிப் பகுதியில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராவதற்காக கோயில்களை திறந்து வைத்தார். தமிழ் வழிபாடுமுறையை அறிமுகப்படுத்தினார். பார்ப்பனர் தமிழ் வழிபாட்டை எதிர்த்து எழுதிய போது, அதற்கு பெரியார் பதிலடி கொடுத்தார்.

ஒருமுறை குன்றக்குடி அடிகளாரின் மடத்திற்கு பெரியார் சென்றார். அப்போது மடத்தின் வழக்கப்படி கட்டளைத் தம்பிரான் என்ற அடிகளாரின் சீடர் மடத்தில் வழமைக்கேற்ப பெரியார் நெற்றியில் திருநீறு பூசினார். பெரியார் எதிர்க்கவில்லை. இதைப் பார்த்துப் பதறி போன அடிகளார், பெரியாருக்கு ஏன் விபூதி பூசினீர்கள் என்று அவேசமாகக் கேட்டார். நான் மதத்திற்காகப் பூசவில்லை, சன்னிதானத்திற்காகத்தான் விபூதி பூசிக் கொண்டேன் என்று பெரியார் அமைதியாக பதில் கூறினார்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# தீட்சிதர் கொள்ளைகள்; ஆதரங்களுடன் அம்பலம்!



சோழர்கள் காலத்தில் கட்டப்பட்ட சிதம்பரம் நடராஜர் கோயில் நிர்வாகத்தை, கோயில் தீட்சிதர்கள் ஏற்று நிர்வகித்து வருகின்றனர். இதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன. கோயில் வருமானத்தை தீட்சிதர்கள் சரியாக காண்பிக்கவில்லை. கோயிலுக்கு வரும் பக்தர்களை தீட்சிதர்கள் மதிப்பதில்லை. கோயில் கணக்கு வழக்குகளில் முறைகேடு உள்ளது. கோயிலில் தேவாரம், திருவாசகம் பாட அனுமதிப்பில்லை என பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதுதொடர்பாக அவ்வப்போது நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

திருவிழா நேரங்களில் கோயில் கனகசபை மீது பக்தர்களை ஏற்றாமல் இருப்பது, தீட்சிதர்கள் தங்களது குழந்தைகளுக்கு குழந்தை திருமணம் செய்வது போன்ற குற்றச்சாட்டுகளும் எழுந்து அதுகுறித்த வழக்குகளும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இதைதொடர்ந்து சென்னை உயர் நீதிமன்றத்தில் ராதாகிருஷ்ணன் என்பவர் ஒரு மனு தாக்கல் செய்தார். அதில், ‘சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு சொந்தமாக தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களிலும், புதுச்சேரியில் காரைக்கால் மாவட்டத்திலும், 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உள்ளது. இந்த நிலங்களை பொது தீட்சிதர்கள், முறையாக பராமரிக்கவில்லை என்பதால் அவற்றை மீட்டு பாதுகாக்க வேண்டும்.

இதுதொடர்பாக முதல்வர் தனிப்பிரிவுக்கு புகார் அனுப்பி உள்ளேன். அந்த புகார் கடலூர் கலெக்டருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மாவட்ட கலெக்டர் விசாரணை கூட்டம் கூட்டிய போதும், அதன்பின் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு சொந்தமான நிலங்களை மீட்க உத்தரவிட வேண்டும்’ என்று குறிப்பிட்டு இருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி தண்டபாணி, மிகப்பெரிய அளவில் அதிர்ச்சியளிப்பதாகவும் கடந்த 2017-18 முதல் 2021-22 வரையிலான வரவு செலவு கணக்கு புத்தகங்களைத் தீட்சிதர்கள் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அந்த அறிக்கையில், சிதம்பரம் நடராஜர் கோயில் நிலங்கள் தொடர்பாக விசாரணை நடத்த 09.03.1976ம் ஆண்டு சிறப்பு தாசில்தார் தமிழக அரசால் நியமிக்கப்பட்டார். அவர் விசாரணை நடத்தி 23.8.1979ல் ஓர் அறிக்கை தாக்கல் செய்தார். அதில் 295.93 ஏக்கர் நிலம் இருந்ததாக கூறப்பட்டுள்ளது. பின்னர் பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு, ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருந்த 215.65 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டது.

இதன்மூலம் 506.97 ஏக்கர் நிலம் தற்போது சிறப்பு தாசில்தாரிடம் உள்ளது. தற்போது கோயிலுக்கும் சொந்தமாக 3,489.58 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் நஞ்சை நிலம் 2,594.40 ஏக்கரும், புஞ்சை நிலம் 895.18 ஏக்கரும் உள்ளது. கோயிலுக்கு நிலத்தை தானமாக எழுதி கொடுத்தவர்களின் வாரிசுகள் வசம் உள்ள 1,267.09 ஏக்கர் நிலத்தில் இருந்து கிடைக்கும் வருமானம் கோயிலுக்கும், தர்ம காரியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் மீதமுள்ள 271.97 ஏக்கர் நிலங்களின் மூலமாக கிடைக்கும் வருமானம் கோயிலுக்கு செலுத்தப்படுவதில்லை. எழுதி வைத்தவர்களின் வாரிசுகளே அந்த சொத்துகளை அனுபவித்து வருகின்றனர்.

சிதம்பரம் அறநிலையத்துறை ஆய்வாளர் தாக்கல் செய்த அறிக்கையில், 1984ம் ஆண்டு 113 கட்டளைகள் இருந்தன. கட்டளை நிலங்களை கட்டளைதாரர்கள் நிர்வகிக்கின்றனர். இவர்கள் தீட்சிதர்களின் நேரடி கட்டுப்பாட்டில் செயல்படுகின்றனர். அதேபோல கட்டளைதாரர்கள் கோயிலுக்கு வழங்க வேண்டிய தொகையை தீட்சிதர்கள் வசம் அளிக்கின்றனர். அதற்கு எந்த முறையான கணக்கு விவரங்களும் இல்லை. இந்த தகவலைச் சிறப்பு தாசில்தார் விசாரணை நடத்தியபோது கட்டளைதாரர்கள் தெரிவித்தனர். இதுதொடர்பாக பதிலளிக்க தீட்சிதர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால், அவர்கள் இதுதொடர்பான வழக்கு கடந்த 2017ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருவதாக தெரிவித்துள்ளனர். கோயிலுக்கு சொந்தமான நிலங்களில் 1221 பேர் குத்தகைதாரர்களாக உள்ளனர். அவர்களிடம் இருந்து கடந்த 8 ஆண்டுகளில் ரூ.36 லட்சத்து 41 ஆயிரத்து 191 வசூலிக்கப்பட்டு உள்ளது. இவர்களுக்காக மின்கட்டணம் கடந்த 8 ஆண்டுகளில் 26 லட்சத்து 29 ஆயிரத்து 763 ரூபாயை சிறப்பு தாசில்தாரே செலுத்தி உள்ளார். சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு சொந்தமான 18.52 ஏக்கர் நிலங்கள் கடந்த 1974, 1985 மற்றும் 1988ம் ஆண்டுகளில் தீட்சிதர்களால் மூன்றாவது நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதற்கான பத்திரப்பதிவு சேத்தியாதோப்பு மற்றும் சிதம்பரம் எண். 1 இணை சார் பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலங்களை மீட்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொது தீட்சிதர்கள் ஒத்துழைப்பு அளிப்பது இல்லை. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**கடுமையான நடவடிக்கை தேவை**

சிதம்பரம் கோயில் நிலங்களை தீட்சிதர்கள் விற்றதை ஆதாரங்களுடன் தமிழக அரசு அம்பலபடுத்திய நிலையில், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுநல சமூக அமைப்புகள் நீதிமன்றத்துக்கும், தமிழக அரசுக்கும் கோரிக்கை விடுத்துள்ளன. இதேபோன்று பிரசித்தி பெற்ற பல கோயில் நிலங்களின் சொத்துக்கள் தீட்சிதர்களால் விற்கப்பட்டதா? என்ற கள ஆய்வுகளை தமிழக அரசு தொடர்ந்து மேற்கொண்டு மக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

## ஜாதி ஒழிப்புப் போராளி இமானுவேல் சேகரனார் நூற்றாண்டு நினைவுக் கருத்தரங்கம்





சென்னை: ஜாதி ஒழிப்புப் போராளி இமானுவேல் சேகரனாரின் நூற்றாண்டை முன்னிட்டு நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 25ஆவது சந்திப்பு, 26.10.2024 அன்று சென்னையில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. உமாபதி - பேரன்பு ஆகியோரின் ஜாதி ஒழிப்புப் பாடலுடன் நிகழ்வு தொடங்கியது.

இமானுவேல் சேகரனாரின் படத்தைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்து இமானுவேல் சேகரனார்; நினைவுகளும் - நிகழ்வுகளும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

மேலும் தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், நீலச்சட்டை கலைஞரை நூலை திறனாய்வு செய்தார்.

பெரியார் இயக்கம் இடைநிலைச் ஜாதிகளுக்காக பார்ப்பனர்களை எதிர்த்து போராடியதே தவிர, ஒருநாளும் பட்டியலின மக்களுக்காக இடைநிலைச் ஜாதிகளை எதிர்த்துப் போராடியது இல்லை என்ற அவதூறுகளுக்கு பதிலடி தரும் விதமாக இருவரது பேச்சும் அமைந்தது. (உரைகள் காணொளி - எழுத்து வடிவில் விரைவில் வெளிவரும்)

அதுமட்டுமின்றி, ஜாதி ஒழிப்புக் களத்தில் 33 வயதில் உயிர்நீத்த மாவீரன் இமானுவேல் சேகரனார் நூற்றாண்டை கொண்டாடும் முதல் இயக்கம் திராவிடர் விடுதலைக் கழகம் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## இராசேந்திரன் – இந்திராணியின் புதிய இல்லத் திறப்பு!



நங்கவள்ளி : வீரக்கல் பகுதியில் நங்கவள்ளி கழக ஒன்றியப் பொறுப்பாளர் இராசேந்திரன் – இந்தராணி இணையரின் புதிய இல்லத் திறப்பு விழா 20.10.24 அன்று நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி இல்லத்தைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு வரவேற்புரை ஆற்றினார். சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார், செயலாளர் சி.கோவிந்தராசு, சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் க.சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். CPI நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர் பழ.ஜீவானந்தம், நங்கவள்ளி பேரூராட்சி முன்னாள் தலைவர் M.M.இரத்தினவேல், கழக நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

இல்லத் திறப்பு விழா மகிழ்வாக கழக வளர்ச்சி நிதியாக ரூ.5000/-யைக் கழகத் தலைவரிடம் இராசேந்திரன் – இந்திராணி ஆகியோர் வழங்கினர். நிறைவாக இராசேந்திரன் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : November 01, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran